பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 23 வியாழக்கிழமை (06-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 71

# அரசின் அடக்குமுறையை எதிர்த்து யாழ். நகரில் நேற்று எழுச்சிப் போர்

## உத்வேகத்துடன் திரண்டனர் மக்கள்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 6

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மீது அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடை போன்ற அழுத்தங்களைக் கண்டித்தும், இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எதிர்த்தும், அடக்குமுறையை ஆட்சேபித்தும், நேற்றுப் பல்லாயிரக்கணக்கான மக்கள், எழுச்சி பொங்க, உணர்ச்சி ததும்பப் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணியையும் மறியல் போராட்டத்தையும் உத்வேகத்துடன் நடத்தினர்.

சுட்டெரிக்கும் வெய்யிலையும் பெருட்படுத்தாது ஆண்கள், பெண்கள், கைக்குழந்தைகளை ஏந்திய தாய்மார்கள், வயோதிபர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள் என்று எல்லாத் தரப்பினரும் வெள்ளமாகத் திரண்டு பேரணியிலும், மறியற் போராட்டத்திலும் பங்கு கொண்டனர்.

விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பொருளாதார தடையை நீக்கி ராணுவத்தை வாபஸ் பெறுக

### மக்கள் சார்பில் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், பெப். 6

பொருளாதார மற்றும் அரசியல் தடைகள் மூலம் அடக்கி வழங்கும் எந்த ஒரு தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள். இப்படியான தீர்வு ஒன்றை தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய நிலையை உருவாக்க முடியும் என்று உங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டிருந்தால் அது தப்புக்கணக்காகவே இருக்கும்.

தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் நேற்று அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பி வைத்திருக்கும் மகஜரில் மேற்கண்டவாறு கூறியுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

நாட்டில் உள்ள தமிழ் மக்களின் நலன்கள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணும் பொறுப்பை உங்களுடைய அரசாங்கம் இன்னும் கைவிடவில்லை என்ற நம்பிக்கையுடனேயே இம்மகஜரைச் சமர்ப்பிக்கின்றோம்.

குடிமக்களின் பாதுகாப்புக் குறித்து கிஞ்சித்தும் அக்கறையில்லாத முறையில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் நடவடிக்கைகள் அமைந்துள்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## மக்கள் போராட்டத்தால் குடாநாடு செயலிழந்தது!

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். குடாநாடு முழுவதும் நேற்று செயலிழந்து, வெறிச்சோடிக் காணப்பட்டது.

யாழ். செயலகம் முன்பாக நேற்று நடைபெற்ற மறியல் போராட்டத்திலும், பேரணிகளிலும் சகல துறைசார்ந்தவர்களும் பங்கேற்றதாலேயே குடாநாடு எங்கும் ஸ்தம்பித நிலையை அடைந்தது.

அரச அலுவலகங்கள், தனியார் வர்த்தக நிறுவனங்கள், கடைகள், பாடசாலைகள், வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற எல்லா ஸ்தாபனங்களும் மூடப்பட்டிருந்தன. சந்தைகளும் கூடவில்லை.

போக்குவரத்தும் நடைபெறவில்லை. இதனால் மக்கள் நடமாட்டம் இன்றி வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. (ஒ-3)

## மக்கள் குறை தீர்க்க முடிந்ததைச் செய்வேன்!

### யாழ் அரச அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், பெப். 6

''உங்களில் ஒருவனாக நின்று உங்கள் குறைகளை என்னால் முடிந்தளவு தீர்க்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன்.''

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இவ்வாறு உறுதி கூறினார்.

நேற்று செயலகம் முன்பாக இடம்பெற்ற மறியல் போராட்ட முடிவில், கையளிக்கப்பட்ட மகஜரைப் பெற்றுக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''மக்களின் அவல நிலை குறித்து உயர்மட்டத்துடன் தொடர்பு கொண்டு, என்னால் முடிந்தளவு செய்து வருகிறேன். தொடர்ந்தும் உங்கள் குறைகளைத் தீர்க்க மகஜரை விரைவில் உரிய இடத்துக்கு அனுப்பி உதவுவேன்'' — என்றார்.

வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் திரு. சூ. சிறில் மகஜரை அரச அதிபரிடம் கையளித்தார். (ஒ-3)

### முச்சந்தி முரளி



உதவி கொடுக்கிற நாடுகள் கண்ணைத் திறந்தால் சரி தான்!

## பிபிலை பொலீஸ் நிலையம் நேற்று தாக்கப்பட்டது!

கொழும்பு, பெப். 6

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த பிபிலை பொலீஸ் நிலையம் நேற்றுத் தாக்கப்பட்டது.

இத்தாக்குதலில் மூன்று பொலீஸார் காயம் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றும்—

சமீப காலத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய முதல் தாக்குதல் இது என்றும்— அரச தரப்புச் செய்திகள் கூறுவதாக வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

### ஷெல் தாக்குதல்

பலாலி, வளலாய்ப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று அதிகாலை முதல் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். பரா வெளிச்சக் குண்டுகளும் ஏவப்பட்டன. [இ-15]

## வெளிநாட்டு, கொழும்பு செய்தியாளர் யாழ்நகரில்

வெளிநாட்டுச் செய்தியாளர்கள், கொழும்புப் பத்திரிகையாளர்கள் பலர் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்களில் பி. பி. ஸி. செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸூம் ஒருவர்.

அவர்கள் யாழ். நகரில் இடம்பெற்ற மறியல் போராட்டத்தையும், பேரணிகளையும் பார்வையிட்டு, செய்திகளைச் சேகரித்தனர். அத்துடன் பேரணியில் மக்கள் கோஷமிட்டவாறு சென்றதையும் படம்பிடித்துக் கொண்டனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் சிலரின் கருத்துக்களையும் அவர்கள் கேட்டறிந்தனர். (ஒ-3)

## தபால்கள் இன்று விநியோகம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறைக்கு வந்த 'லில்லி' கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்கள் இன்று முதல் விநியோகிக்கப்பட இருக்கின்றன.

திங்கட்கிழமை இந்த தபால் பொதிகள் யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டிருந்தன. (இ-எ)

## பழுகாமத்தில் 14 தமிழர் கைது

கொழும்பு, பெப். 6

மட்டக்களப்பு மாவட்டம் — பழுகாமம் என்னுமிடத்தில் 14 தமிழர்களை இராணுவத்தினர் கைது செய்தனர் என்று ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [இ-எ]

### வீரமரணம்

மட்டக்களப்பு மாவட்டம் பெரியவட்டுவான் பகுதியில் நேற்று முன்தினம் காலை பதுங்கியிருந்த படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான அருள்ராஜ் வீரமரணமடைந்தார். [உ-3]

## நேற்றைய பேரணியில் ஒலித்த கோஷங்கள்

யாழ்ப்பாணம், பெப். 6

''சர்வதேச சமூகமே! கொலை வெறி பிடித்த ஸ்ரீலங்கா அரசுக்கு உதவி வழங்காதே.''

நேற்று யாழ். நகரில் இடம்பெற்ற பேரணிகளில் ஒலித்த கோஷங்களில் இதுவும் ஒன்றாகும்.

பேரணிகளில் ஒலித்த கோஷங்களில் குறிப்பிடத்தக்கவை சில வருமாறு;

★ உதவி வழங்கும் நாடுகளுக்கு உத்தமனாக நடிக்காதே!

★ உதவி வழங்கும் நாடுகளே! இனப்படுகொலைக்கு உதவி வழங்காதே!!

★ சர்வதேச சமூகமே அமைதி ஏற்பட உதவு!

★ போரை நிறுத்து! சமாதானத்தை நிலை நாட்டு!!

★ தமிழர் வீடுகளில் சிங்களவரை குடியேற்றாதே!

★ எமது பகுதியில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

★ சொந்த வீடுகளில் மீளக் குடியேற விடு!

★ பேனா ஏந்தும் கைகளை ஆயுதம் ஏந்த வைக்காதே!

★ தீவகம் உனக்கென்ன சீதனமா?

★ அப்பாவி மக்களின் கண்ணீர் அணுகுண்டிலும் பொல்லாதது.

★ தமிழ் ஈழமே தமிழர் தாயகம்.

இவை போன்ற வாசகங்கள் அடங்கிய பெரும் எண்ணிக்கையான சுலோக அட்டைகளை மக்கள் பேரணிகளில் ஏந்தி வந்தனர்.

[ஒ-3-90-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார தடையை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
ளன. மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் கண்மூடித் தனமாக விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்துகின்றன. கரையோரக் கிராமங்கள் மீது கடற்படைப் படகுகள் பீரங்கித் தாக்குதலை நடத்துகின்றன. இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள கிராமங்கள் மீது இரவு வேளைகளில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இவை தினசரி நடக்கும் சம்பவங்களாகி விட்டன.

## தாக்குதல் யார் மீது?

அரசாங்கப் படைகளின் கோழைத்தனமான இந்த நடவடிக்கைகளினால், தற்போது நடத்தப்படுகின்ற யுத்தம் தமிழ் மக்கள் மீது கூட்டு மொத்தமாக நடத்தப்படுகின்றதா அல்லது போராளி அமைப்பு ஒன்றின் மீது நடத்தப்படுகின்றதா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

தந்தையை இழந்த குழந்தைகள், கணவனை இழந்த மனைவிகள், தலைவனில்லாத குடும்பங்கள், அழிக்கப்பட்ட கிராமங்கள், வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளின் இடிபாடுகள், உடைந்த கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் பாடசாலைகள் ஆகியன இக்கோரமான யுத்தத்தின் சின்னங்களாக உள்ளன

இலங்கைத் துருப்புகள் வெறிகொண்டு அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழிப்பது பொதுவான நிகழ்ச்சியாகிவிட்டது. 1983 இல் இருந்து இடம்பெற்ற இது போன்ற பல சம்பவங்கள் இதற்குச் சாட்சி பகர்கின்றன.

ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றின் விசாரணைக்குட்படுத்தப்பட்ட கொக்கட்டிச்சோலைப் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 67 ஆக உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் அந்தக் கிராமத்தில் இருந்து காணாமற் போனவர்களின் எண்ணிக்கை 60 என்றும், அதற்குக் கணக்குக் காட்டப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதே கொக்கட்டிச்சோலைக் கிராமத்தில் 1987ஆம் ஆண்டில் ''செரண்டிப்'' கடலுணவு நிறுவனம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த சிறுவர்கள் உட்பட 23 பேரை இராணுவக் கொமாண்டோக்கள் கூட்டிச் சென்று சுட்டுக் கொன்றனர். இதுபோன்ற ஒழுங்கீனமும் ஈவிரக்கமற்ற தன்மையும் இராணுவத்தில் பெரிதும் காணப்படுமானால் அராஜக நிலைதான் ஏற்படும்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் முதியவர்கள் சித்திரவதைக்குட்டுத்தப்பட்டும், பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டும் உள்ளார்கள் என்று எமக்கு நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பாவி இளைஞர்கள் அவர்களின் வீடுகளில் இருந்தோ அல்லது அகதி முகாம்களில் இருந்தோ இராணுவத்தால் அகற்றப்பட்டுள்ளனர். அதன் பின்னர் அந்த இளைஞர்கள் என்னவானார்கள் என்பது தெரியவில்லை. அப்பகுதிகளில் கிராமங்கள் சூறையாடப்பட்டன. கட்டடங்கள் அழிக்கப்பட்டன.

தமிழர்கள் அவர்களின் பாரம்பரிய கிராமங்களில் இருந்து இராணுவத்தினால் துரத்தப்பட்டுள்ளனர். அக்கிராமங்களில் குறிப்பாக வவுனியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் — பழிவாங்கல் உணர்வுடன் பெரும் எண்ணிக்கையில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுகின்றனர்.

## பொருளாதார முற்றுகை

தமிழ்ப் பகுதிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதார முற்றுகை பலத்த கஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளது. நம்ப முடியாத அளவுக்கு உணவு மற்றும் பாவனைப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

அண்மையில் நிலவரம் சிறிது தளர்வடைந்தது. மக்கள் பட்டினி விளிம்பில் அதுவரை இருந்தனர். உணவுப் பொருள்கள் இன்னும் தாராளமாக வாங்கக்கூடியதாக இல்லை.

1990 ஜுலை முதல் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டிள்ளது. டோர்ச் பட்டரிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மண்எண்ணெய்யின் விலை அதிகமாக உயர்ந்திருந்த காரணத்தினால் நாம் இரவு வேளைகளை முழு இருளிலேயே கழித்து வந்தோம். (இப்போது மண்எண்ணெய் விலை குறைந்துள்ளது.)

மண்எண்ணெய் தவிர்ந்த ஏனைய எரிபொருள்கள் மீது விதிக்கப்பட்ட முழுத்தடை காரணமாக அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன மக்கள் சைக்கிள்களில் பயணம்மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். உயிருக்குப் போராடும் நோயாளிகள் கூட பழைய சைக்கிள் ரிக்ஷோக்களில்தான் ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

## மருந்துத் தடை

எமது ஆஸ்பத்திரிகளுக்கு வழமையாக வழங்கப்பட்டு வரும் கோட்டா அடிப்படையில் மருந்து விநியோகிக்கப்படவில்லை. அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பொதுவாக பாவிக்கப்படும் மாற்று ஊசி மருந்து தடுப்பு மருந்து வகைகளும் கையிருப்பில் கிடையாது. இதன் பலனாக பாம்புக் கடிக்காளான மக்கள் இறக்கிறார்கள். விசர்நாய்க் கடிக்குள்ளானவர்களும் உயிரிழக்கின்றார்கள். ஏற்பு நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் மரணமடைகின்றார்கள்.

யாழ்ப்பாணத்திற்கு மருந்து வகைகள் எடுத்துவரப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. வயதான, நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கவேண்டிய நிலையில் விடப்பட்டுள்ளார்கள்.

சமய உணர்வு மற்றும் பௌத்தமத இலட்சியங்களில் அதிக ஈடுபாடு காட்டும் தாங்கள் மக்களுக்குத் தேவையான அடிப்படை வைத்திய உதவிகளையும் ஏனைய வசதிகளையும் மறுப்பது தர்மத்திற்கு முரணானதும் மனிதாபிமான மற்றதுமான செயல் என்பதை உணரத் தவறமாட்டீர்கள்.

## போஷாக்கின்மையால் இறக்கும் குழந்தைகள்

போஷக்கின்மை காரணமாக ஆயிரக்கணக்கான குழந்தைகள் வலது குறைந்தவர்களாகி விட்டார்கள். இதன் காரணமாக சுமார் ஆயிரத்து ஐநூறு குழந்தைகள் இறந்து விட்டனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. கர்ப்பிணித் தாய்மார்களில் 67 சதவீதமானோரும் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களும் போஷாக்கின்மையால் கஷ்டப்படுகின்றார்கள்.

இடம்பெயர்ந்தவர்கள், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் நாளாந்த உழைப்பாளர்கள் யுத்தம் காரணமாகத் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான உழைப்பை இழந்துள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. உலர் உணவு நிவாரணம் பெற உரித்துடைய, வறுமைக் கோட்டின் கீழ் உள்ள ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 947 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவில்லை. 19ஆவது தவணை விநியோகத்தின் பின்னர் இந்த நிவாரணம் நிறுத்தப்பட்டுவிட்டது.

எந்தச் சூழ் நிலையிலும் தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியை புறக்கணிக்க மாட்டார்கள் என்பது மேன்மைதங்கிய தங்களுக்குத் தெரியும். மிதமிஞ்சிய துன்பத்தின் கீழ் தமிழ் மாணவர்கள் தங்களைப் பரீட்சைகளுக்குத் தயார் செய்கின்றனர். அவர்களைத் திகைப்பூட்டும் விதத்தில் பரீட்சைகள் ஒத்திப் போடப்படுகின்றன அல்லது தேவையற்ற விதத்தில் தாமதப்படுத்தப்படுகின்றன. அதனால் அவர்கள் விரக்தியடைகின்றார்கள்.

இதனால் அவர்கள் துப்பாக்கிக் கலாசாரத்தை நோக்கித் தள்ளப்படுவதில் வியப்பு ஏதும் இல்லை,

விமானக் குண்டுவீச்சுத்தாக்குதலால் பல பாடசாலைகளும் கல்வி நிறுவனங்களும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இன்னும் பல பாடசாலைகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. தமிழ் மாணவர்கள் கல்வித் துறையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்பகுதியில் அங்குள்ள மாணவர்கள் அனுபவிக்கும் வசதிகளில் ஒரு துளி கூட தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை.

## விவசாயம் பாதிப்பு

பசளைகளும், கிருமிநாசனிகளும விவசாயிகளிடம் இல்லை. இம்மாவட்டத்திற்கு பசளைகளைக் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் பழங்கால விவசாய மற்றும் நீர்ப்பாசன முறைகளை தற்போது மேற்கொண்டுள்ளனர். அவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதாக இல்லை. இதனால் அவர்கள் வறுமைக் கோட்டுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அதற்குக் காரணம் அக்காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்வது பொருளாதார ரீதியில் பலன் தராது என்பது தான்.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்களே ஆவர். கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட மீன்பிடிப் படகுகள். மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அப் பகுதிகளைப் பிடித்துள்ள இராணுவத்தினரால் அழிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

அவர்கள் கடற்றொழிலை இழந்தது மட்டுமல்ல, கடற்றொழிலுக்கான உபகரணங்களையும் இழந்துவிட்டனர். அவர்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அடிப்படைக் கஷ்ட நிவாரணமும் அரசாங்கத்தினால் மறுக்கப்பட்டுள்ளது.

## தொழில் இழப்பு

யாழ். ஏரியில் ஆழம் குறைந்த பகுதியிலும் கரையோரப் பகுதிகளிலும் கடற்றொழிலில் ஈடுபடுவோர் கடற்படையினர் நடத்தும் துப்பாக்கிப் பிரயோகங்களினால் பயமுறுத்தப்படுகின்றனர். பல மீனவர்கள் கடலில் வைத்தே கொல்லப்பட்டுள்ளனர். வேறு சில மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

வடக்கு - கிழக்கில் உள்ள தொழிற்சாலைகளும்வேலைத் தலங்களும் செயலிழந்துள்ளன. இவற்றில் வேலை செய்து வந்த ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தொழில் இழந்து நிர்க்கதிக்குள்ளாகி உள்ளனர்.

ஜனநாயக ரீதியிலான பேச்சுக்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் நியாயமான தீர்வு காணும் அனைத்து முயற்சிகளும் தோல்வி கண்டதால் தான் தற்போதைய துரதிர்ஷ்டவசமான நிலை எழுந்தது. போலித்தனமான உடன்பாடுகளும் உண்மைக்கு மதிப்பளிக்காமையுமே பழைய அணியைச் சேர்ந்த தமிழ் அரசியல்வாதிகளின் அனுபவங்களாக இருந்தன.

இந்த நாட்டில் உள்ள சிங்களவர்கள் மற்றும் இனங்களைச் சேர்ந்தவர்களுடன் சமமான பங்காளர்களாக வாழவே நாம் விரும்புகின்றோம். அநீதி, குரூரம், அடக்குமுறை, ஏகபோகம் ஆகியன எதிர்நோக்கும் போது, அவற்றை எதிர்க்கன் செயலில் ஈடுபடுவது மனிதனின் இயற்கை உந்துதலாகும். இது தான் எங்கள் மத்தியில் இடம் பெற்றுள்ளது.

## சண்டையை நிறுத்தவேண்டும்

நல்லெண்ணம் உள்ள எல்லா மனிதர்களின் உள்ளங்களிலும் சமாதான எண்ணம் உள்ளது. நாகரீகத்தின் மதிப்பு நீடித்து நிலைபெற வேண்டுமானால், சண்டை நிறுத்தப்பட்டு எதிராளிகள் இணக்கத்திற்கு வரவேண்டும். சமாதானம் நீடித்து நிலை பெற வேண்டுமானால் அது நீதி, நியாயம் மற்றும் உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் காணப்படவேண்டும்.

இந்த நாட்டின் குடிமக்களாகிய நாங்கள் பின்வருவனவற்றை நிறைவேற்ற உத்தரவிடும்படி மேன்மை தங்கிய ஜனாதிபதியை வலியுறுத்துகின்றோம்.

1. அனைத்து பொருளாதார முற்றுகைகளையும் அகற்றுதல்.
2. தமிழ்க் கிராமங்களில் இருந்து இராணுவத்தை வாபஸ் வாங்குதல்.
3. இராணுவம் வெளியேறிய பின்னர் அக்கிராமங்களில் மக்களை மீளக் குடியமர்த்துதல்.
4. இராணுவம் குடியிருக்கும் பாடசாலைகளில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும்.
5. எரிபொருள்கள் மீது விதிக்கப்பட்ட தடை அகற்றப்பட வேண்டும். போக்குவரத்தை சகஜ நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.
6. ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் ஒழுங்காகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.
7. மருந்துகள், பசளைகள் மற்றும் கிருமிநாசனிகள் ஆகியவற்றை வடபகுதிக்கு எடுத்து வர விதிக்கப்பட்ட தடைகள் அகற்றப்படவேண்டும்.
8. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மூடப்பட்டுள்ள எல்லாத் தொழிற்சாலைகளையும் தாமதமின்றித் திறக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். — இவ்வாறு இம்மகஜரில் கூறப்பட்டுள்ளது.

# மண்டைதீவு பாடசாலைக்ள் புதிய இடத்தில்

யாழ்ப்பாணம், பெப். 6

மண்டைதீவு கொத்தணிக்கு உட்பட்ட மண்டைதீவு மகா வித்தியாலயம், மண்டைதீவு றோ. க. வித்தியாலயம், மண்டைதீவு கார்த்திகேய வித்தியாலயம் என்பன யாழ்ப்பாணம், ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர்கலைக் கல்லூரியில் — முழுநேர பாடசாலையாக இயங்கி வருவதாகக் கொத்தணி அதிபர் அறிவித்துள்ளார். [ஒ]

# 3 ஈழத் தமிழர் உட்பட ஐவர் கைது

சென்னை, பெப். 6

நாட்டு வெடி குண்டுகளை வைத்திருந்ததாக பெரியார் மாவட்டம், பவானிசாகர் அகதிகள் முகாமைச் சேர்ந்த 3 ஈழத் தமிழ் இளைஞர்களும் உள்ளூர் வாசிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 5 பேரும், நெடுஞ்சாலைகளில் கொள்ளையிட திட்டமிட்டிருந்ததாக பொலீஸார் தெரிவித்தனர். [ஒ-த]

# பதிவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 6

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்களின் குடும்ப விவரங்களை அப்பகுதி கிராம சேவையாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். குடும்ப அங்கத்தவர்களின் தேசிய அடையாள அட்டை உட்பட சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றது.

(த)


# கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கவனத்திற்கு நீர்ப்பாசனத் திணைக்கள அறிவித்தல்

எனது பிரிவின் கீழ் பராமரிக்கப்படும் கீழ்வரும் குளங்களில் நீர் விநியோக பராமரிப்பு வேலைகளை திறம்பட செய்விப்பதற்கு அந்தந்த குளங்களின் கீழ் விவசாயம் செய்யும் கமக்காரர்கள் அடங்கிய ''கமக்காரக் குழுக்கள்'' (Farmers Organization) தெரிவு செய்ய வேண்டியுள்ளதால், தயவு செய்து இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்ட இடங்களில் கூடி, உங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு உதவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

| குளத்தின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1. புதுமுறிப்பு | புது முறிப்பு நீர்ப்பாசன-விடுதி | 20 – 02 – 1992 | காலை 8–30 |
| 2. கனகாம்பிகைக் குளம் | இரணமடு நீர்ப்பாசன-விடுதி | 21 – 02 – 1992 | காலை 8–30 |
| 3. பிரமந்தல் ஆறு | பிரமந்தல் ஆறு-நீர்ப்பாசன விடுதி | 24 – 02 – 1992 | காலை 8-30 |
| 4. கல்மடு<br>5. பெரிய குளம் கண்டாவளை | கல்மடு நீர்ப்பாசன-விடுதி | 24 – 02 – 1992 | காலை 10–30 |

எந்திரி சு. சிவகுமார்,
நீர்ப்பாசன எந்திரி,
கிளிநொச்சி.

வில்சன் வீதி,
கிளிநொச்சி.
05 – 02 – 1992

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜீவ் கொலைச் சம்பவம்:

# பிரபாகரன், பொட்டம்மான் மற்றும் 24 பேர் மீது வழக்கு!

## ஏப்ரலில் தாக்கல் செய்யப்படுமாம்

கொழும்பு, பெப். 6

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் உட்பட மொத்தம் 26 பேருக்கு எதிராக எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான குற்றப் பத்திரிகைகளைத் தயாரிப்பதில் விசேட புலனாய்வுப் பொலீஸார் தற்போது ஈடுபட்டு வருகிறார்களாம்.

'இந்து' பத்திரிகையை மேற்கோள் காட்டி, கொழும்பு நாளிதழ்கள் இச்செய்தியை வெளியிட்டிருக்கின்றன.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புலிகளின் தலைவர் பிரபாகரனையும் மற்றும் பொட்டம்மானையும் சரணடையுமாறு விசேட நீதிமன்றம் விடுத்திருக்கும் உத்தரவு, இந்தியாவிலோ அல்லது வெளி இடத்திலோ, சட்டத்தையும், நீதியையும் மதிக்கும் எந்த ஒருவருடனும் பிரபாகரன் தொடர்பு கொள்வதைத் தடுக்கும்.

ராஜீவ் கொலைச் சம்பவத்தில் பிரபாகரன் மீதான குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு— உறுதியான — சட்டரீதியாகச் செல்லுபடியாகக் கூடிய — சான்றுகளைத் திரட்டும் நடவடிக்கையில் விசாரணைக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். பொட்டம்மானுக்கு எதிரான சான்றுகள் ஏற்கனவே விசாரணைக் குழுவிடம் உள்ளன.

விசாரணைக்குழு சமர்ப்பித்த ஆவண ரீதியான சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே நீதிபதி சித்தீக் இருவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் சரணடைய உத்தரவிட்டார்.

விசாரணைக் குழுவினர் எதையும் அவசர அவசரமாகச் செய்யவில்லை. ராஜீவ் கொலையில் பிரபாகரன் சம்பந்தப்பட்டிருக்கிறார் என உத்தியோகபூர்வமாகப் பிரகடனம் செய்ய முன்னர், மாற்ற முடியாத சட்ட ரீதியாக நிரூபிக்கத்தக்க சான்றுகளை யாழ்ப்பாணத்தில் இருந்து பெறுவதிலும் குழுவினர் ஈடுபட்டனர் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-த]

## உடுகம்பொல விண்ணப்பம்

கொழும்பு, பெப். 6

தம்மைக் கட்டாய ஓய்வில் செல்லுமாறு விடுக்கப்பட்ட உத்தரவை ரத்துச் செய்யும்படி பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்திருக்கிறார்.

கட்டாய ஓய்வில் தம்மை அனுப்பும் முடிவு தமக்கு முன்கூட்டியே சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்படவில்லை என்றும் திரு. உடுகம்பொல கூறியிருக்கிறார்.

(ஓ-எ)

பாடசாலைகளில் கடமை புரியும்

## சமயாசமய ஊழியர் பலர் நிரந்தர நியமனம் பெறுவர்

மானிப்பாய், பெப். 6

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் சமயாசமய, தற்காலிக ஊழியர்களாக கடமையாற்றுபவர்களை நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ள வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடசாலைகளில் இவ்வாறு கடமையாற்றும் ஊழியர்களின் விவரத்தை சேகரித்து அனுப்பி வைக்குமாறு மாகாண கல்வி அமைச்சு, கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர் ஊழியர்கள் பலர் நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

(ஓ-90)

## கெற்பலியில் வீடு

அரசாங்க புனர்வாழ்வு திணைக்களத்தின் உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மிருசுவில் கெற்பலியில் கட்டப்பட்ட 350 வீடுகள் கடந்த வெள்ளியன்று சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டன. தீவுப்பகுதி அகதிகள் இவ்வீடுகளில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

கொழும்புக்கு

## மின் மாற்றிகளை இங்கிருந்து எடுத்துச் செல்வதில் சிக்கல்!

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். மாவட்டத்தில் உள்ள மின்மாற்றிகள் சிலவற்றை திருத்துவதற்காக கொழும்புக்கு கொண்டு செல்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக கப்பலில் மின்மாற்றிகளை அனுப்புமாறு மின்சார சபையின் கொழும்பு தலைமையகம் அறிவித்துள்ளது.

ஆனால், காங்கேசன்துறை துறைமுகம் செயற்படாததால், பருத்தித்துறை ஊடாகவே மின்மாற்றிகளை அனுப்ப வேண்டியுள்ளதாக மின்சார சபையின் யாழ். அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமாக இங்கிருந்து கொழும்பு சென்றுள்ள மின்சாரசபை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

[ஓ-3]

ஊவா பகுதியில்

## கைதானோரின் விவரம்; செஞ்சிலுவை சேகரிப்பு

கொழும்பு, பெப். 6

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஊவா பகுதியில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் சேகரித்துள்ளனர்.

ஊவாப் பகுதியிலுள்ள பொலீஸ் நிலையங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து சம்பந்தப்பட்டவர் விவரங்களை செஞ்சிலுவை அதிகாரிகள் அறிந்து கொண்டனர்.

இதில் இருந்து கைது செய்யப்பட்டவர்களில் 40 பேர் மகஸின் சிறைச்சாலையிலும் மற்றும் நான்கு பெண்கள் உட்பட 9 பேர் பதுளை பொலீஸ் நிலையத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

[ஓ-3]

## களவுபோன இராணுவ சீருடைகள்

கொழும்பு, பெப். 6

இராணுவக் களஞ்சியம் ஒன்றில் இருந்து களவுபோன இராணுவச் சீருடைகள், சப்பாத்துகள், பட்டிகள் மற்றும் ரவைக்கூடுகள் அனுராதபுரம் நகரில் உள்ள கடை ஒன்றில் இருந்து இராணுவப் பொலீஸாரால் அண்மையில் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இராணுவ கோப்ரல் ஒருவரும், வர்த்தகர் ஒருவரும் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

[இ-எ]

பேரணி நடத்த நிபந்தனை:

## ஜெயலலிதா அறிவிப்புக்கு கருணாநிதி ஆட்சேபம்

சென்னை, பெப். 6

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஊர்வலமோ, பேரணியோ நடத்த முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா முன் நிபந்தனை விதித்திருப்பதை தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கடுமையாக ஆட்சேபித்திருக்கிறார்.

முதலமைச்சர் அறிவித்துள்ள முன் நிபந்தனைகள் கேலிக்குரியது என்றும்— செல்லுபடியாகாதென்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு அவர் வெளியிட்ட அறிக்கையில்—

ஒரு கட்சி நடத்தும் பேரணியில் மாற்றுக் கட்சியினர் வன்முறை நடத்திவிட்டு, பேரணி நடத்தும் கட்சி மீது பழிபோட வாய்ப்பிருப்பதாக சட்டப்பேரவையில் பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் குறிப்பிட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேபோல் தலைவர்கள் இறக்கும் போது கலவரங்கள் நடப்பதை சுட்டிக்காட்டி அவற்றுக்கு யார் பொறுப்பு என்றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

கடந்த காலத்திலும், பல்வேறு முதலமைச்சர்களின் ஆட்சிக்காலத்திலும் எதிர்க்கட்சிகளின் பேரணிகளில் வன்முறைகள் ஏற்பட்டுள்ளன என்றும்—

அத்தகைய சந்தர்ப்பங்களில் இத்தகைய அறிவிப்புகளை எந்த முதலமைச்சரும் வெளியிடவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஓ-த)

## ம. எண்ணை வீழ்ச்சியால் விவசாயத்தில் ஆர்வம்

அச்சுவேலி, பெப். 6

மண்எண்ணெய் விலை வீழ்ச்சி அடைந்திருப்பதை அடுத்து விவசாயிகள் ஆர்வத்துடன் உணவு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கி உள்ளனர்.

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, புன்னாலைக்கட்டுவன், உரும்பராய் பகுதிகளில் செய்கை பண்ணப்படாமல் இருந்த பல ஏக்கர் நிலப்பரப்பு காலபோகப் பயிற்செய்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் எதிர்காலத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு வசதியாக, எரிபொருள்களை சேமித்து வைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

[ஓ-11]

## யாருடையது?

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில்கண்டெடுக்கப்பட்டபெண்களின் பணப்பை [மணிப் பேர்ஸ்] ஒன்று மு. இராஜகோபால் என்ற அன்பரால் உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த அடையாளங்களைத் தெரிவித்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். [அ]

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்.

விசேட பொதுக் கூட்டம்

காலம்:
07 - 02 - 1992 வெள்ளி மாலை 4 மணி

இடம்:
புதிய விஞ்ஞான கல்விக் கழகம்,
யாழ்ப்பாணம். [எழிலகம் முன்பாக]

விடயம்:
1. விசேட அலுவலர்களை அறிமுகஞ்செய்தல்.
2. விசேட அறிவுறுத்தல்கள் தெரிவித்தல்.

சகல கோட்டங்களினதும் சகல அங்கத்தவர்களும் கட்டாயமாக வருகை தந்து, இவ் விசேட விளக்கங்களை நேரில் அறியுமாறு வேண்டுகின்றோம். வி. பு. ம. மு. உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

[19602] — பொதுச் செயலாளர்.

★ சகல கண்ணாடி வகைகள்
முகம் பார்க்கும் கண்ணாடி 48'' x 14'' அளவு
★ போமிக்கா சீற் வகைகள்
போமிக்கா ஒட்டுவதற்கான பேஸ்றட்
★ படம் பிறேம் (Wooden Frames)

★ படம் வைத்து ஒட்டும் மட்டை (Mount) பல அளவில்
★ பிறேமிற்கு ஒட்டும் கோல்ட் றபர் பட்டி
★ முட்டைக் கோழித் தீன்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

விமாகி

27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-1483]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

ச. சிவகுலசிங்கம் என்பவரது 552982509V இலக்க அடையாள அட்டை 24-1-92 இல் காணாமற் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் பஞ்சரத்தினம் லேன், கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தயவு செய்து தபால் மூலம் அனுப்பி வைக்கவும். [5032]

## பழைய அரசியல் புத்தகம்

ஈழத்து பழைய அரசியல் சஞ்சிகைகள், புத்தகங்கள் நல்ல விலையில் கொள்வனவு செய்யப்படும். யாழ். பழைய புத்தகக்கடை 32, அருச்சுனா, (ஸ்ரான்லி) வீதி. [5021]

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-1462]

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தி யோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? காரியம் கைகூடுமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய பதில் உடன் கிடைக்கும். ஜாதகம், குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [19546]

## பண்ணிசைப் போட்டி

சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படவிருக்கும் பண்ணிசைப் போட்டி, எதிர் வரும் ஞாயிறு காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. [ஓ-90]

---

**கலை, வர்த்தக கல்லூரி**

**C. C. A.**

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L - 93**

4 வது பிரிவு-
இரண்டாவது வகுப்பு
ஆரம்பம் :
08 - 02 - 1992

[சி-1486]

---

**உயர் கலைக் கல்லூரி**

ஆனைப்பந்தி

தமிழ், ஆங்கில
தட்டச்சு -
சுருக்கெழுத்து
வகுப்புகள்

வார நாட்களிலும்,
சனி, ஞாயிறும்

**05-02-92**

ஆரம்பமாகிவிட்டன
காலை 8-00 மணிக்கு

[சி-1472]

---

காரைநகர் கொத்தணி அமைப்பு நடத்தும்

# திருவள்ளுவர் விழா

இடம்: சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி - பிரதான மண்டபம்

காலம்: 1992-02-09 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00 மணி

வாழ்த்துரைகள், சிறப்புச் சொற்பொழிவு, ஆய்வுரைகள் கவியரங்கம் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன.

★ தமிழீழத்தின் அறிஞர்கள் கலந்து சிறப்பிப் பார்கள்.

★ அன்புடன் அழைக்கின்றோம்.

**'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'**

திரு. செ. தேவதாசன்.
(தலைவர்)

திரு.
எம். பி. அருளானந்தன் (ஆசிரியர்)
(விழாக்குழுச் செயலாளர்)

[19599]

---

Feb. 15 இல் நடைபெறவுள்ள

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான

# விசேட பயிற்சி வகுப்புகள்

**7 நாட்கள் மட்டுமே.**

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
★ நாளாந்தக் கட்டணம் ரூபா 25/-.

**ஆரம்பம்: 7-2-1992** மு.ப. 9-30

**ASTAN** *INSTITUTE*

101/10, Stanley Road, Jaffna.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[சி-1475]

---

## அந்தியேட்டி அழைப்பு



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 | 8 |
| 9 | 1 |
| 1920 | 1992 |

திருமதி
**தங்கப்பாக்கியம் அருணாசலம்**

''எம் வாழ்வுக்கு ஒளி விளக்காய் நின்று, அன்புடன் வழிகாட்டி, பண்புடன் வாழவைத்த அன்புத் தாயின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.''

7-2-1992 வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், தொடர்ந்து சபிண்டீகரண கிரியைகளிலும், பந்தி போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

''விஷ்ணு சுந்தரம் இல்லம்'',
வித்தனை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. [5028]

---

## பிரத்தியேக வகுப்பு

வணிகமும், நிதியும்

**G. C E A/L 92, 93**

இ. இரட்ணம்

| | 93 | 92 பகுதி II |
|---|---|---|
| வியா. | - 5 — 6 | 3 — 4 |
| சனி | - 5 — 6 | 3 — 4 |
| ஞாயிறு | - 5 — 6 | 3 — 4 |

ஆரம்பம்: சனி 08-02-1992 3-00 மணி

இடம்: **கலை, வர்த்தகக் கல்லூரி**
வெலிங்டன் சந்திக்கருகாமை,
யாழ்ப்பாணம். [சி-1480]

---

**கலை, வர்த்தகக் கல்லூரி**

**C. C. A.** யாழ்ப்பாணம்.

பொருளியல் — உதயன்

| பிரிவுகள் | நேரம் | விடயம் |
|---|---|---|
| I | 9-00 | கேள்விக் கோட்பாடு |
| II, III | 8-00 | அடிப்படை பொருளாதார பிரச்சினை |
| IV | 10-00 | பொருளியல் அறிமுகம் |

ஆரம்பம்: 08 - 02 - 1992

[சி-1484]

---

ஓட்டுமடம்
கலைவாணி சனசமூக நிலையத்தின்

## 2-வது தையற் பயிற்சி வகுப்பு

முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் நடத்தப்படும் மேற்படி வகுப்புக்கான விண்ணப்பங்கள் இன்றிலிருந்து தகுதியுடையோரிடமிருந்து கோரப்படுகின்றன. பயிற்சி வகுப்பில் சேர விரும்புவோர்,

சு. சண்முகம்,
17 (53), ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 — 02 — 1992

கலைவாணி ச. ச. நிலையம்,
ஓட்டுமடம்.

(19592)

---

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்**
(பேராதனைப் பல்கலைக்கழகம்)

**G. A. Q.** பாடநெறிக்கு **92 / 93**

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களையும், விவரங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 — 02 — 1992

இதற்கான விரிவுரைகள்,

ஆரம்பம்: 08 - 02 - 1992
(காலை 9-00 மணி)

**B.A - 92**
**DECEMBER**

விரிவுரைகள் ஆரம்பம்: 23-02-1992
(காலை 8-00 மணி)

யாழ். பல்கலைக்கழகத்திற்கான G.A.Q. விரிவுரைகள் நடைபெறுகின்றன.

மு. குறிப்பு:
உபபாடம் — Sri Lankan - Studies
ஆரம்பம்: 09 — 02 — 1992

நிர்வாகி:
S. அருள்நங்கை.

(சி-1468)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### முற்றுப்புள்ளி காண வழி?

நாட்டில் நடந்துகொண்டிருக்கும் உள்நாட்டுப் போருக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக ஒன்றுமறியாத அப்பாவி மக்களின் இரத்தம் சிந்தப்படுவது வேதனை தரும் விடயம்.

இவ்வாறு "திருவாய் மலர்ந்திருக்கிறார்" ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசா.

உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய தன் அவசியத்தை சகல தரப்பாரும் உணர்ந்துள்ளனர். உள்நாட்டு யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் தமிழ் மக்கள் மட்டுமே வரவேற்பார்கள் என்பதல்ல. சிங்கள மக்களும் ஏனையோரும் கூட மகிழ்ச்சி தெரிவிப்பர்.

வழமைபோல, ஒற்றுமை சமாதானம் ஆகிய வாக்கியங்களையும் ஜனாதிபதி குறிப்பிடத் தவறவில்லை. ஒரு நாட்டில் சமாதானமும், ஒற்றுமையும் நிலைப்பதற்கு அந்நாட்டின் சகல இன மக்களும் சரிசமமாக மதிக்கப்பட்டு, சகல உரிமைகளும் சகலருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும். ஒரு சாராரை மறு சாரார் அடக்கி ஒடுக்கி, அவர்களின் வாழ்வுரிமைகளைப் பறித்துவிட்டு, எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என எதிர்பார்ப்பதில் அர்த்தம் இல்லை.

தமிழர்கள் சமாதானமாக வாழ மறுத்தவர்கள் அல்லர், ஒற்றுமையாக வாழ முயன்று தோல்வி கண்டவர்கள். சிங்களவர்களுடன் இணைந்து வாழ விரும்பி எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டவர்கள். ஆனால் அந்த நல்லெண்ணத்தை பலவீனமாக நினைத்துக் கொண்டு ஒற்றுமைக்கும், சமாதானத்துக்குமான சகல வழிகளையும் தடுத்தவர்கள், தடை செய்தவர்கள் சிங்கள அரசியல் தலைவர்களே.

தாம் ஓர் ஒடுக்கப்படும் இனமாக, அடக்கி ஆளப்படும் மக்களாக வாழ முடியாது என்று தமிழர்கள் தீர்மானித்தார்கள். அவர்களின் முடிவு தவறா? அந்த முடிவுக்கு அவர்களை இட்டுச் சென்றவர்கள் யார்?

எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா போன்ற ஒரு சில தலைவர்கள் சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழருக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தபோது, அது தேவையில்லை ஒற்றையாட்சி முறையின் கீழேயே ஒற்றுமையாக வாழ விரும்புவதாகக் கூறியவர்கள் தமிழ்த் தலைவர்கள்.

ஆனால் இன்று சிங்களவர்களுடன் ஒன்றாக மட்டும் அல்ல, இணைந்துகூட வாழ முடியாது என்ற முடிவுக்கு தமிழர்கள் வந்திருப்பது ஏன்? தன்னாட்சி உரிமையுடன் பிரிந்து வாழ வேண்டும் என்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராட முனைந்தது ஏன்?

எல்லாவற்றுக்கும் சிங்களத் தலைவர்களின் அடக்குமுறை, அடிமைப்படுத்தல் சிந்தனையும் செயற்பாடுகளுமே காரணம். அவற்றினாலேயே இன்று உள்நாட்டு யுத்தம் நடக்கிறது. ஒன்றுமறியாத அப்பாவிகளின் இரத்தம் சிந்தப்படுகிறது,

இவை கண்டு வேதனைப் படுவதால் பயனில்லை. அவற்றை நிறுத்த, தடுக்க முன்னர் விட்ட தவறுகளை உணர்ந்து திருந்தி நடக்கச் சிங்களத் தலைவர்கள் முன்வர வேண்டும். இது விடயத்தில் மனத்துணிச்சலுடன் காரியத்தில் இறங்கிச் செயற்பட வேண்டியவர் ஜனாதிபதி பிரேமதாசாவே. மேடைகளில் வெறும் வேதனைக்குரல் எழுப்புவதாலும், நீலிக்கண்ணீர் வடிப்பதாலும் நடக்கப்போவது எதுவுமில்லை!

## வெற்றுக் காணிகளை மாந்தோப்புகளாக மாற்றி உங்களுக்கும் நாட்டுக்கும் சூழலுக்கும் உதவுக!

சுற்றுப்புறச் சூழல் சமநிலைக்கும், கால நிலை சீர்குலைவைத் தடுப்பதற்கும், பூமியின் மேற்பரப்பானது 30 சதவீதமாவது, ஆழ்வேர் அமைப்பைக் கொண்ட நிரந்தரமான தாவரங்களால் மூடப்பட்டிருக்க வேண்டும் என்பது சூழவியல் ஆய்வாளர்களின் முடிவு.

தாவரங்கள் தமது காபன் தன்மயமாக்கல் மூலம் வளியில் உள்ள காபனீரொட்சைட்டை (கரியமிலவாயு) நீக்கி, ஒட்சிசனை (பிராணவாயு) கூட்டுகின்ற தன்மையுடையன.

மனிதன் உட்பட உயிர் வாழும் சகல உயிரினங்களுக்கும் சுத்தமான ஒட்சிசன் மிகவும் அவசியமானதொன்றாகும். உயிரினங்கள் வாழும் இடங்களிலும், சேதனப் பொருள்கள் அழியும் இடங்களிலும் காபனீரொட்சைட் பெருகும். இவ்வாறு பெருகும் காபனீரொட்சைட் திரவ

### அதிக காபன் தன்மயமாக்கல் தன்மை கொண்டது அது

ரங்களின் காபன் தன்மயமாக்கல்மூலம் குறைக்கப்பட்டு, அதன் அளவு சமநிலையில் பேணப்படும். காபனீரொட்சைட் அளவு பேணப்படாது விட்டால், உயிரினங்கள் பூமியில் வாழ முடியாத ஒரு சூழ்நிலை தோற்றுவிக்கப்படும்.

தாவரங்களின் வேர்கள் நிலத்தடி நீரை ஆவியுயிர்ப்பு மூலம் வளி மண்டலத்ினுள் செலுத்தி மழை பெய்வதற்கு தேவையான முகில் கூட்டங்களை உண்டாக்க உதவுகின்றன. சூழலில் ஏற்படுத்தப்படுகின்ற, ஒலிகள் 95 டெசிபெலுக்கு மேலாக அமையுமாயின், அது மனித செவிப்புலனைப் பாதிப்பதுடன் உள நோய்களையும் தூண்டக்கூடியது என்பது மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

அண்மைக்காலத்தில் இந்திய விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகள், அயன மண்டலத்தில் வளரக்கூடிய வேம்பு, சவுக்கு என்பன சூழலில் ஏற்படுத்தப்படுகின்ற தீங்கான ஒலிகளைக் குறைப்பதில் முதலாம், இரண்டாம் இடத்தை வகிப்பதாகக் கூறுகின்றன.

எமது தேசத்தின் கால நிலைத் தன்மையில் வளரக்கூடிய முக்கனி தரும் மரங்களில், முதலிடம் வகிக்கும் மாமரம் காபனீரொட்சைட்டை தன்மயமாக்கல் மூலம் ஒட்சிசனாக மாற்றுவதில் முதலிடம் வகிப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

மக்கள் கூடும், விழாக்கள் நடக்கும் இடங்களில் மாஇலை தொங்கவிடப்படும் பழக்கம் இந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம்.

எனவே மாமரச் செய்கையில் ஈடுபடுவதால் பலமுக நன்மைகளைப் பெறலாம். பழ உற்பத்தியைப் பெருக்கலாம். அதன் மூலம் விவசாயத்தைப் பெருக்கலாம். சத்துள்ள பழம் தாராளமாகக் கிடைக்கும். பொருளாதாரத்தை அதிகரிக்கலாம். சூழல் சம நிலையைப் பேணலாம்.

வெற்றுக் காணிகளில் மாந்தோப்புகள் உண்டாக்குவதில் ஈடுபடுங்கள். பணமும் சம்பாதிக்கலாம். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவலாம். சூழல் சுகாதாரத்துக்கும் பங்களிக்கலாம். ★

தமிழீழ ஆய்வு நிறுவனம்

## படையினரால் 12,000 பேர் கொலை செய்யப்பட்டனர்!

### ஐ. நா. மனித உரிமைக்குழு அறிக்கை

ஜெனிவா, பெப். 6

1983 ஆம் ஆண்டு முதல் இதுவரை சுமார் 12 ஆயிரம் பேர் இலங்கையில் காணாமற் போயுள்ளனர் என்றும்—

இவர்களில் பெரும் பாலானோரை அரசு ஆதரவாளர்கள் அல்லது அரசுப் படையினர் படுகொலை செய்தனர் என்றும் ஐ. நா. மனித உரிமைக்குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது.

இவர்கள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட பின்னரே காணாமற் போயுள்ளனர் என்றும் இக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இன்னும் காணமற்போன பொதுமக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்றும்—

கைதானவர்கள் யார், அவர்களைக் கைது செய்தவர்கள் யார், எங்கு வைத்து கைது செய்யப்பட்டு எந்த வாகனத்தில் இராணுவத்தினர் இவர்களை ஏற்றிச்சென்றனர் என்பன போன்ற விவரங்கள் அரசிடம் உள்ளன என்றும் அந்தக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### தமிழ் விவசாயிகளுக்கு விசேட அடையாளஅட்டை

செங்கலடி, பெப். 6

மட்டக்களப்புக்கு மேற்கே உள்ள காட்டுப் பிரதேசமான தொப்பிக்கலையில் தற்போது இராணுவத்தினர் முகாமிட்டிருப்பதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மை அறுவடை செய்யப்படாத நிலையில் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அப்பகுதி விவசாயிகள் அரசாங்க அதிபர் திரு. ஆர். மோன குருசாமியைச் சந்தித்து முறையிட்டுள்ளனர்.

விவசாயிகள் வேளாண்மையை அறுவடை செய்வதற்கு இரு வாரகால அவகாசம் வழங்குவதற்கும், விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்க அதிபர் உறுதி அளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

### விற்பனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், பெப். 6

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் பல பகுதிகளிலும் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் கிளிநொச்சியில் சோழன் பல்பொருள் அங்காடி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. [இ-3]

### நேபாள பிரதமர் சீனா செல்கிறார்

காட்மண்டு, பெப். 5

நேபாளப் பிரதமமந்திரி கிரிஜா பிரசாத் கொய்ராளா அடுத்த மாதம் 14 ஆம் திகதி சீனாவுக்கு ஆறு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு செல்லவிருக்கின்றார்.

சீனப் பிரதமர் லீபெங் விடுத்த அழைப்பை ஏற்றே திரு. கொய்ராளா பீகிங் செல்கிறார் என்றும் அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

### அரசின் அடக்குமுறையை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஊழியர்கள், வர்த்தகத்துறை ஊழியர்கள் மற்றும் தனியார் துறை ஊழியர்கள், கூட்டுறவு ஊழியர்கள், ஆகிய சகல வகையினரும் நேற்றைய எழுச்சிப் போராட்டத்தை தங்களது இன்னல்களை எடுத்தியம்பும் விதத்தில் உத்வேகத்துடனும் உணர்வு பூர்வமாகவும் நடத்தினர்.

தமிழீழ வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நேற்றைய பேரணி, மறியல் போராட்ட நிகழ்ச்சிகளில் குடாநாட்டின் நாலா பக்கங்களிலும் இருந்து வந்த மக்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு திக்குகளில் இருந்தும் புறப்பட்ட பேரணிகள் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.45 மணிவரையும் செயலகம் வந்து சேர்ந்தன.

ஐம்பதுக்கும் மேற்பட்ட மக்கள் அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள், மாதர் கழகங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட பல வெகுசன போராட்டக் குழுக்களையும் சேர்ந்த பிரதிநிதிகளும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

மக்கள் தங்கள் எதிர்ப்பையும், கஷ்டங்களையும் வெளிப்படுத்தும் வகையில் எழுச்சிமிக்க கோஷங்களை எழுப்பிச் சென்றதோடு சுலோக அட்டைகளையும் தாங்கிச் சென்றனர்.

வலிகாமம் வடக்கு, வலி-தெற்கு, வலி-மேற்கு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்தும்—

வடமராட்சி மக்கள், கோப்பாய் மக்கள் கல்வியங்காட்டுச் சந்தியில் இருந்தும் —

தீவக மக்கள் சத்திரத்துச் சந்தியில் இருந்தும்—

தென்மராட்சி மக்கள் அரியாலை தபால்கட்டை சந்தியில் இருந்தும்—

யாழ். கரையோரப் பகுதி மக்கள் குருநகர் சேமக்காலை சந்தியில் இருந்தும்— பேரணியாகப் புறப்பட்டு நல்லூர் ஊடாகவும் நகரின் மற்றும் பல வீதிகள் ஊடாகவும் யாழ். செயலகத்தைச் சென்றடைந்தனர்.

பேரணிகளிலும் மறியற் போராட்டத்திலும் இடம்பெயர்ந்தோர், அகதி முகாம்களில் தங்கியிருப்போர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பேரணிகள் யாழ். செயலகத்தில் ஒன்றுகூடி மக்கள் சாரிசாரியாக வந்து, மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மறியற் போராட்டத்தைத் தொடர்ந்து தமிழீழ வெகுசன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் திரு. சூ. சிறில், அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகம், ஜனாதிபதிக்கு [illegible] மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

(அ-3-15-90-165-117-131)

### இருதய மாற்று நிபுணரின் முதுமை தடுப்பு ஆராய்ச்சி

#### வெற்றி பெற்றால் மற்றொரு சாதனை

கொழும்பு, பெப். 6

முதுமை அடைவதைத் தடுப்பதற்கான காரணிகள் தொடர்பான ஆராய்ச்சியில் தாம் ஈடுபட்டிருப்பதாக உலகின் பிரபல இருதய மாற்று சத்திர சிகிச்சை நிபுணர் பேராசிரியர் கிறிஸ்டியன் பேர்னாட் கொழும்பில் தெரிவித்தார்.

உலகிலே முதலாவது இருதய மாற்றுச் சத்திர சிகிச்சையை 1968 ஆம் ஆண்டில் செய்த பெருமையைப் பெற்றவர் கிறிஸ்டியன் பேர்னாட் ஆவார்.

முதுமைக்கும் புற்றுநோய்க்கும் தொடர்புண்டு என்று கூறிய பேராசிரியர் பேர்னாட், மருத்துவத் துறையில் லேஸர் கதிரைப் பாவிப்பது குறித்தும் தாம் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

லேஸர் சிகிச்சை முறையைக் கொண்டு வருவதன் மூலம் நோயாளி ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கும் காலத்தையும், வைத்தியச் செலவையும் குறைக்க முடியும் என்றும் பேராசிரியர் பேர்னாட் சொன்னார்.

பித்தப்பை சத்திரச் சிகிச்சையை லேஸர் மூலம் செய்தால் அந்த நோயாளி ஒரு நாளிலே ஆஸ்பத்திரியை விட்டு வெளியேற முடியும் என்றும் பேராசிரியர் பேர்னாட் தெரிவித்தார்.

''வளர்ச்சியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் போஷாக்கின்மையால் குழந்தைகள் இறப்பது அதிகரிக்கிறது. ஆகவே பெரும் செலவை ஏற்படுத்தும் இருதய மாற்றுச் சத்திர சிகிச்சையில் இந்த நாடுகள் ஈடுபட முடியுமா?''— என்ற கேள்விக்கு பேராசிரியர் பேர்னாட் பதிலளிக்கையில், ''இலங்கை மட்டுமல்ல வேறு பல நாடுகளும் யுத்தங்களை நடத்துவதற்கு கஷ்டமின்றி தேவையான நிதியைப் பெறக்கூடியதாக இருக்கின்றன. இப்படியான நாடுகள் யுத்தத்திற்கு பணத்தை பெற முடியுமானால் கல்விக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும் அவைகளால் தேவையான பணத்தை ஏன் பெற்றுக் கொள்ள முடியாது?- என்று கேட்டார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் நகுலேஸ்

இராமலிங்கம் நகுலேஸ் (Retired Supdt. of Traffic Post & Tele. Com. Dept.) 04 - 02 - 1992 அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மினியின் (U.K.) தந்தையும், டாக்டர் தில்லையின் (U.K.) மாமனாரும், காலஞ்சென்ற கந்தையா, காலஞ் சென்ற செல்லத்துரை, நடராசா, காலஞ் சென்ற முருகேசு, சிவகாமிப்பிள்ளை, காலஞ் சென்ற அன்னலெட்சுமி, இராசலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந. நாகேஸ்வரி.

கட்டுடை,
மானிப்பாய். [19608]

## ச. வி. ஆறுமுகம்

காரைநகர் களபூமி விளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது திருநெல்வேலி கொக்குவில் றோட், 2-வது ஒழுங்கையில் வசித்தவருமான சண்முகம் விஸ்வநாதர் ஆறுமுகம் 5-2-1992 காலை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ச. வி. கந்தையா, யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் [S.V.M] ச. வி. முருகேசு ஆகியோரின் சகோதரரும், நடராசா, சண்முகம், தருமலிங்கம், கந்தசாமி, செல்வநாயகி, சரஸ்வதி ஆகியோரின் தந்தையாரும், கந்தசாமி, கணேசபிள்ளை, அன்னலட்சுமி, பத்மாவதி, தவநாயகி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [6-2-1992] வியாழக்கிழமை காலை 9-30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. நடராசா
[மகன்]

கொக்குவில் றோட்,
2 ஆவது ஒழுங்கை. (19609)

## திருமதி பாக்கியம் செல்லையா

திருமதி பாக்கியம் செல்லையா அவர்கள் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதியரின் மூத்த புதல்வியும், திருமதி யோகம்மா நமசிவாயத்தின் அன்புச் சகோதரியும், அருளம்பலம் [முன்னாள் Jaffna Co-Operative Stores LTD. கணக்காளர்], கனகசபாபதி [முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர்], காலஞ்சென்ற திருமதி ஸ்ரீதாம்பாள் மகாதேவா, காலஞ்சென்ற சிவரத்தினம், மகாலிங்கம், பரமநாதன், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி திலகேஸ்வரி அருளம்பலம், காலஞ்சென்ற திருமதி வல்லாம்பிகை கனகசபாபதி, திருமதி இராசமணி கனகசபாபதி, மகாதேவா [இலங்கை போக்குவரத்துச் சபை], திருமதி ஜெயலக்ஷ்மி மகாலிங்கம், திருமதி புஸ்பவதி பரமநாதன், திருமதி எலிசபத் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை 6-2-1992 பிற்பகல் 3-00 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்டி வீதி, இல. 12, செம்மணி ஒழுங்கையில் இருக்கும் அன்னாரது இல்லத்திலிருந்து அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செ. அருளம்பலம்

A Baur & Co., Jaffna. (19610)

## திருமதி பவளம் வேலாயுதபிள்ளை

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பவளம் வேலாயுதபிள்ளை 5-2-1992 இல் காலமானார்.

அன்னார் முன்னாள் பொலீஸ் இன்ஸ்பெக்ரர் காலஞ்சென்ற சான்றோ வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், பாலேந்திரன் [பொறியியலாளர்-BankHok], பாலேஸ்வரி, ஞானேந்திரன் [களஞ்சியப் பொறுப்பாளர், மஸ்கன்ஸ் இன்ரஸ்ரீட், இறட்மலானை], இரவீந்திரன் [பொறியியலாளர் - லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், சக்திவடிவேல், உமா, கமலாதேவி, வதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஸி, லக்ஸன், சுமுதினி, நிரோசன், டிலோசன், டிரோசனா, சமந்தா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

இவரின் ஈமச் சடங்குகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த. இராசதுரை
[மருமகன்]

மானிப்பாய் றோட்,
ஆனைக்கோட்டை. (19611)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 6-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 11 பொலிஸ் உயரதிகாரிகள் விரைவில் கட்டாய லீவில்!

கொழும்பு, பெப். 6

பொலீஸ் விசேட நடவடிக்கைகள் பணியகத்தின் தலைவரான பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல லீவில் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து அப்பிரிவைச் சேர்ந்த மேலும் பதினொரு பொலீஸ் உயரதிகாரிகள் கட்டாய லீவில் அனுப்பப்படவிருக்கின்றனர்.

நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள நாளிதழ் ஒன்று இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இரு சிரேஷ்ட பொலீஸ் அதிபர்கள் [எஸ். எஸ். பி.], ஐந்து பொலீஸ் அதிபர்கள் [எஸ். பி.], மூன்று உதவிப் பொலீஸ் அதிபர்கள் [ஏ. எஸ். பி.], சிரேஷ்ட பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் ஆகியோரே கட்டாய லீவில் அனுப்பப்படவிருப்பதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

தெற்கில் ஜே. வி. பிக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல்வேறு வன்செயல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த வசதியாகவே இவர்கள் லீவில் அனுப்பப் படவிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் இவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர் அல்லது கட்டாய ஓய்வில் செல்லும்படி பணிக்கப்படுவர் என்றும் கருதப்படுகிறது.

இதேவேளை—

மனித உரிமை மீறலில் ஈடுபடுகின்ற இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகளுக்கு கொழும்பு அரசு கட்டாய ஓய்வு அளித்து வேலை நீக்கம் செய்யவிருக்கிறது என்று அதன் வெளிநாட்டுப் பிரசாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆனால் இது தவறான தகவல் என்று இலங்கை இராணுவத்துறை மறுத்துள்ளது.

பொலீஸ் துறையைப் பொறுத்த வரை இத்தகவலில் உண்மையில்லை என்று பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா கூறியிருக்கிறார். [உ-எ-10]

## போலி வைத்தியர்களுக்கு எதிராக நடவடிக்கை

### சுகாதார அதிகாரிகளுக்கு அதிகாரம்

யாழ்ப்பாணம், பெப். 6

போலி வைத்தியர்கள் என அடையாளம் காணப்பட்டால், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபம் நாட்டிலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

போலி வைத்தியர்களில் அனேகமானோர் மேற்கத்திய மருந்து வகைகளைக் கொடுப்பதற்கு தகுதி ஏதும் அற்றவர்கள் என்று சுற்று நிருபத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ளவர்களில் சுமார் 8,000 பேர் தகுதியோ, தராதரமோ இல்லாத போலிகள் என்று கண்டறியப்பட்டிருந்தது.

இவர்கள் மேற்கத்திய சிகிச்சை முறைகளைப் பயன்படுத்தி மக்களுக்கு தீங்கு விளைவிப்பதாக வைத்தியத் துறையைச் சேர்ந்தவர்கள் கண்டித்திருந்தனர்.

(ஒ 18)

## 32 மாணவர் கடத்தல்பற்றி விசாரிக்கக் கோரிக்கை

கொழும்பு, பெப். 6

1989, 1990 களில் எம்பிலிப்பிட்டியாவில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 32 பாடசாலை மாணவர்கள் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று இலங்கை அரசை, கொழும்பில் இயங்கும் மனித உரிமை பேணும் வழக்கறிஞர்கள் சங்கம் கோரியுள்ளது.

[இ-எ]

## ஈராக் மீது மற்றொரு தாக்குதல் நடத்தப்படுமா?

ஈராக் மீது மீண்டும் தாக்குதல் ஒன்றை அமெரிக்கா நடத்தும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் ஈராக் ஆயுதம் வாங்குவதையோ அல்லது ஆயுதம் தயாரிப்பதையோ ஐ. நா. கண்காணிக்க வேண்டும் என்ற போர்நிறுத்த நிபந்தனையை ஏற்க முடியாது என்று ஈராக் அறிவித்திருப்பதாக ஐ. நா. அதிகாரி ஒருவர் கூறினார்.

உணவு மற்றும் மருந்து வகைகளை வாங்க ஈராக் எவ்வளவு எண்ணெய்யை விற்பனை செய்யவேண்டும் என்பது பற்றி முடிவு செய்ய ஆஸ்திரிய தலைநகர் வீயன்னாவில் ஐ. நா. பாதுகாப்புச் சபை ஒழுங்கு செய்த கூட்டத்தையும் ஈராக் பகிஷ்கரித்தது.

இதனை அடுத்து ஈராக்கின் தற்போதைய போக்கு குறித்து விவாதிக்க ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அவசரக்கூட்டம் ஒன்று நேற்று நடைபெறுவதாக இருந்தது.

ஈராக்கின் தற்போதைய முடிவுகளின் மூலம் அமெரிக்கா மீண்டும் அந்த நாட்டைத் தாக்கும் அபாயம் எழுந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## திருமதி சுப்புலக்ஷ்மியின் பிணை மனு நிராகரிப்பு

சென்னை, பெப். 6

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா கொலை சம்பந்தமாக பயங்கரவாத தடை (தடா) சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் முன்னாள் தி. மு. க. அமைச்சர் திருமதி சுப்புலக்ஷ்மி ஜெகதீசன் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரின் பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

தனி நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். எம். சித்தீக் அவர்களது பிணை மனுக்கள் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்தார். (ஒ-த)

## போட்டி ஜனதாதள் தலைவராக அஜித்சிங்

### வி. பி.சிங் குழுவைநீக்கத் தீர்மானம்

புதுடில்லி, பெப். 6

ஜனதா தளம் கட்சி உத்தியோகபூர்வமாக பிளவுண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

திரு. வி. பி. சிங் தலைமையிலான ஜனதா தளம் செயற்குழுவினால் வெளியேற்றப்பட்ட எம்பியான திரு. அஜித் சிங் போட்டி ஜனதா தளம் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

போட்டி ஜனதா தளம் கட்சியின் செயற்குழுவின் கூட்டம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றது.

தமது கட்சிதான் உண்மையான ஜனதா தளம் கட்சி என்று அக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த பொதுத்தேர்தலில் ஜனதா தளம் கட்சி தோல்வியடைந்ததற்குக் காரணமான திரு. வி. பி. சிங் தலைமையிலான குழுவை, கட்சியில் இருந்து வெளியேற்றுவதாகவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [இ-எ]

## பருத்தித்துறையில் காவல் நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 6

தமிழீழ காவல் துறையின் பருத்தித்துறை காவல் நிலையம் நேற்று முன்தினம் கடற்புலிகளின் தளபதி திரு. சூசையால் திறந்து வைக்கப் பட்டது.

இந்தப் பணிமனையில் பருத்தித்துறை, இன்பருட்டி, திக்கம், புலோலி, கற்கோவளம், துன்னாலை, நெல்லியடி, மந்திகை, கரவெட்டி, அல்வாய், வதிரி ஆகிய பிரதேச மக்கள் தமது முறைப்பாடுகளை பதியலாம் என்று தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தெரிவித்தார்.

(இ-165)

## வதிரியில் ஆரம்ப நீதிமன்று

வடமராட்சிப் பிராந்தியத்துக்கான ஆரம்ப நீதிமன்று நேற்று முன்தினம் நெல்லியடி வதிரியில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இதனைத் திறந்துவைத்தார்.

ஒரு பெண் உட்பட ஐவர் ஆரம்ப நீதிமன்ற உறுப்பினர்களாக திரு. இளம்பரிதி முன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

[இ-165]

## தி. மு. க. எம். எல். ஏக்கு தடை!

தற்போது நடந்து வரும் தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத் தொடர் முடிவடையும் வரை அதன் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு தி. மு. கழக எம். எல். ஏ. திரு. பரிதி இளம்வழுதிக்கு சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்று தடை விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org